# பத்திரிக்கைச் செய்தி

இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அவர்கள் உத்தரவின் பேரில் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்களுடன் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்கள் தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் உள்ள அரசு அலுவலகங்களில் திடீர் சோதனை பின்வரும் இடங்களில் நடத்தப்பட்டது.

20.10.2020-ந் தேதி திண்டுக்கல் மாவட்டம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகர்கள் மற்றும் ஆய்வுக்குழு அலுவலர்கள் இணைந்து திரு.A.பெருமாள், துணை இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, திண்டுக்கல் அலுவலகத்தில் நடத்தப்பட்ட திடீர் சோதனையில் கணக்கில் காட்டப்படாத ரொக்கம் ரூ.1,00,150/- மற்றும் வீட்டு சோதனையில் கணக்கில் வராத ரூ.4,10,000/- மற்றும் ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது.

22.10.2020-ந் தேதி சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகர்கள் மற்றும் ஆய்வுக்குழு அலுவலர்கள் இணைந்து செயற்பொறியாளர், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம், கோட்டம்-13, அடையார் அலுவலகத்தில் நடத்தப்பட்ட திடீர் சோதனையில் கணக்கில் காட்டப்படாத ரொக்கம் ரூ.61,000/-, சந்தேகத்திற்கிடமான வகையில் கையால் எழுதப்பட்ட ரூ.1,66,000/- மற்றும் ரூ.2,70,000/- ஆன ரசீதுகள் மற்றும் ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது.

22.10.2020-ந் தேதி விருதுநகர் மாவட்டம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்கள் மற்றும் ஆய்வுக்குழு அலுவலர்கள் இணைந்து விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி, சார்பதிவாளர் அலுவலகத்தில் நடத்தப்பட்ட திடீர் சோதனையில் கணக்கில் காட்டப்படாத ரொக்கம் ரூ.31,880/- மற்றும் ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது.

22.10.2020-ந் தேதி திருவாரூர் மாவட்டம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகர்கள் மற்றும் ஆய்வுக்குழு அலுவலர்கள் இணைந்து நன்னிலம், சார்பதிவாளர் அலுவலகத்தில் நடத்தப்பட்ட திடீர் சோதனையில் கணக்கில் காட்டப்படாத ரொக்கம் ரூ.1,04,900/- மற்றும் ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது.

22.10.2020-ந் தேதி நாகப்பட்டினம் மாவட்டம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகர்கள் மற்றும் ஆய்வுக்குழு அலுவலர்கள் இணைந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக நேரடி நெல் கொள்முதல் நிலையம், ஒரத்தூர் அலுவலகத்தில் நடத்தப்பட்ட திடீர் சோதனையில் கணக்கில் காட்டப்படாத ரொக்கம் ரூ.88,230/- மற்றும் ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது.

23.10.2020-ந் தேதி கோயம்புத்தூர் மாவட்டம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகர்கள் மற்றும் ஆய்வுக்குழு அலுவலர்கள் இணைந்து கோயம்புத்தூர், K.G. சாவடி, போக்குவரத்து சோதனை சாவடியில் நடத்தப்பட்ட திடீர் சோதனையில் கணக்கில் காட்டப்படாத ரொக்கம் ரூ.91,230/- மற்றும் ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது.

23.10.2020-ந் தேதி திருப்பூர் மாவட்டம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகர்கள் மற்றும் ஆய்வுக்குழு அலுவலர்கள் இணைந்து திருப்பூர், மணியாக்காரன்பாளையம், தமிழ்நாடு மின்சார வாரியம், உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் நடத்தப்பட்ட திடீர் சோதனையில் கணக்கில் காட்டப்படாத ரொக்கம் ரூ.2,01,390/- மற்றும் ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது.